14.07.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பூமி தண்ணீர் உலகமாக மாறும் ஆராய்ச்சியாளர்கள்



**லண்டன்:** பூமியிலுள்ள நிலப்பரப்புகள் மறைந்து, மீண்டும் தண்ணீர் உலகமாக மாறிவிடும் என ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.நேச்சர் ஜியோசைன்ஸ் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில், கண்டங்களின் மேலோட்டின் தடிமன் குறைந்து வருவதாகவும், 2 பில்லியன் ஆண்டுகளில், பூமி முழுவதும் மீண்டும் தண்ணீரால் சூழப்படும் எனவும் தெரியவந்துள்ளது. சுமார் 2.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் தண்ணீரிலிருந்து நிலம் வெளிவரத் தொடங்கியது. கண்டங்களின் மேலோட்டின் தடிமன், அதன் அதிகபட்ச அளவான 40கி.மீ., அளவை ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு எட்டியது. அதன் பின் அதன் தடிமன் குறைந்தபடியே உள்ளதாகவும், கண்டங்களின் மேலோடுகள் அரிப்படைந்து வருவதால், பூமி மீண்டும் நீரில் மூழ்கிவிடும் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மக்காசோளம் வரத்து அதிகரிப்பு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டியில், நேற்று மக்காசோளம் வரத்து அதிகரித்தது.கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் ஆண்டுதோறும் மக்காசோளம் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது மக்காசோளம் அறுவடை செய்யப்பட்டு வருவதால், மார்க்கெட் கமிட்டியில் மக்காசோளம் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது.கள்ளக்குறிச்சி மார்க்கெட் கமிட்டிக்கு, நேற்று 200 மக்காசோளம் மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சமாக 1,509 ரூபாய், குறைந்தபட்சமாக 1,483 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.மொத்தம் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான மக்காசோளம், நேற்று கொள்முதல் செய்யப்பட்டது. இதேபோல் 89 விவசாயிகள் 100 மூட்டைகள் எள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். அதிகபட்சமாக 5,399 ரூபாய், குறைந்தபட்சமாக 4,219 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மொத்தம் 4 லட்சம் ரூபாய் மதிப்பிலான எள் கொள்முதல் செய்யப்பட்டது.

## தண்ணீரின்றி கருகும் கரும்பு பயிர்கள்

கள்ளக்குறிச்சி:மணிமுக்தா அணை பகுதியில் தண்ணீரின்றி 200 ஏக்கருக்கு மேற்பட்ட கரும்பு பயிர்கள் கருகி வருகின்றன.கள்ளக்குறிச்சி அடுத்த சூளாங்குறிச்சியில் மணிமுக்தா அணை உள்ளது. இதில் தேங்கும் நீரினை பயன்படுத்தி சுற்று வட்டாரத்தில் 5000க்கும் மேற்பட்ட நிலங்களில் விவசாயிகள் பயிர் செய்கின்றனர். மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக அணை தண்ணீரின்றி வறண்டது.கடந்த ஆண்டு பெய்த வடகிழக்கு பருவமழையால் மணிமுக்தா அணையில் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்தது. மகிழ்ச்சியடைந்த விவசாயிகள், நெல், கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர்.தண்ணீர் நிரம்பியும் பராமரிப்பில்லாததால் அணை ஷெட்டர் வழியாக அதிகளவில் தண்ணீர் வெளியேறி நீர்மட்டம் குறைந்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, பயிர்களை பாதுகாக்க முடியாமல் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.சுற்று வட்டார ரங்கநாதபுரம், அகரகோட்டாலம், வாணியந்தல், பாலப்பட்டு, பழையசிறுவங்கூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 200 ஏக்கருக்கும் மேற்பட்ட விளைநிலங்களில் பயிரிடப்பட்ட

கரும்புகள் முற்றிலும் காய்ந்து கருக துவங்கியது. கரும்பு விவசாயிகள் பயிரை காப்பாற்ற முடியாமல் பெரும் அவதிப்பட்டு வருகின்றனர்.

## வெள்ளாடு வளர்க்க இன்று பயிற்சி முகாம்

பெரம்பலூர் : பெரம்பலூர் மாவட்ட கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் வெள்ளாடு வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம், இன்று (14ம் தேதி) நடக்க உள்ளது.இதில், பரண்மேல் வெள்ளாடு வளர்ப்பு குறித்தும், உயர் இன, கலப்பின வெள்ளாடு வளர்ப்பு, தீவன மேலாண்மை, வெள்ளாடு கொட்டகை அமைக்கும் முறை, வெள்ளாடுகளை பராமரிக்கும் முறை, நோய்தடுப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.பயிற்சியில் சேர விரும்பும் பெரம்பலூர் அரியலூர் மாவட்ட விவசாயிகள், பெரம்பலூர் துறைமங்கலம், நான்குரோடு மின் அலுலவலகம் அருகே உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தை நேரில் அல்லது 04328-224599 என்ற போன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என பேராசிரியர் பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

## புதுகை நெல் கொள்முதல் நிலையங்களில் வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு தொகை பட்டுவாடா

புதுக்கோட்டை : புதுக்கோட்டை மாவட்டத்தில், நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்குரிய தொகையை, அந்த விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 137 விவசாயிகளுக்கு, 1.37 கோடி ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி, கறம்பக்குடி ஆகிய பகுதிகளில், 1.50 லட்சம் ஏக்கரில் காவிரி தண்ணீரைக் கொண்டும், இதர பகுதிகளில் ஏரி, கண்மாய்களில் தேக்கி வைக்கப்படும் மழைநீர், ஆழ்துளை கிணறு மூலமும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில், மாவட்டத்தில், 60 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உரிய தொகையை, விவசாயிகளிடம் நேரடியாக பட்டுவாடா செய்வதில், அலுவலர்கள் மோசடி செய்வதாக

விவசாயிகள் குற்றம் சாட்டி வந்தனர்.இந்த பிரச்னைகளை தவிர்க்க, விவசாயிகளின் வங்கிக் கணக்கில், நெல் கொள்முதல் தொகையை செலுத்தும் திட்டம் சோதனை அடிப்படையில், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.புதுக்கோட்டை மாவட்டத்தில், நெல் கொள்முதல் செய்வதற்காக கறம்பக்குடி அருகே கலியராயன்விடுதி, ரெகுநாதபுரம் மற்றும் ஆலங்குடி அருகேயுள்ள நெடுவாசல் ஆகிய இடங்களில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. இந்த நிலையங்களில், 137 விவசாயிகளிடம் இருந்து, 950 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதற்காக, விவசாயிகளின் வங்கிக் கணக்கில், 1.37 கோடி ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து, மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் மாதவன் கூறியதாவது: வங்கிக்கணக்கில் செலுத்தும் திட்டம் மூலம், நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு, 50 ரூபாய் கமிஷனாக பிடித்தம் செய்யப்பட்டது தவிர்க்கப்படும். இந்த நடைமுறையை, அனைத்து பருவத்திலும், நெல் கொள்முதலின் போது பின்பற்ற வேண்டும், என்றார். இது குறித்து, நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் அலுவலர்கள் தரப்பில் கூறியதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில், சோதனை அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ள இத்திட்டம், விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதிலுள்ள சில குறைபாடுகள் களையப்பட்டு, இத்திட்டம் அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் விரிவுபடுத்தப்படும், என்றனர்.

## மண் பரிசோதனை செய்து நிலத்தில் உரமிட விவசாயிகளுக்கு ஆலோசனை

தேவதானப்பட்டி:வைகை அணை வேளாண்மை விதை ஆராய்ச்சி நிலைய தலைவர் பாலகிருஷ்ணன் கூறியதாவது: பெரியகுளம் தாலுகா, மேல்மங்கலம், ஜெயமங்கலம், குள்ளப்புரம், கெங்குவார்பட்டி கிராமங்களில் இரண்டாம் போக நெல் சாகுபடி மார்ச், ஏப்ரலில் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் செய்யப்பட்டுள்ளது.

ஜூன், ஜூலையில் நெற்பயிர்கள் அறுவடைக்கு முன் தரையில் சாய்ந்து பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக கோடையில் பயிர் சாகுபடி செய்யாமல் இருந்து நடப்பு ஆண்டில் கோடையில் சாகுபடி செய்ததால் மண்வளம் நல்ல நிலையில் உள்ளது. நெல்லிற்கு காய்ச்சலும்

பாய்ச்சலும் தேவை. பயிர் பூ பூத்த பின் 20 முதல் 25 நாட்களுக்கு மட்டும் 5 சென்டி மீட்டர் அளவிற்கு நீர் இருந்தால் மட்டும் போதுமானது. நீர் அதிகமாக பாசனம் செய்யும் போது, அறுவடையின் போது நெற்பயிர்கள் முதிர்ச்சியடைந்து சாய வாய்ப்பு உள்ளது. மேலும் கோடைகால சாகுபடியில் ஏப்ரல், மே யில் நல்ல மழை பெய்துள்ளதால் நீர் தேங்கிய நிலங்களிலும் மற்றும் கடை நிலை பகுதியிலும் நீர் வடிக்க முடியாமல் உள்ள நிலையில் நெற்பயிர்கள் சாய வாய்ப்பு உள்ளது.

மேலும் வரும் காலங்களில் மண் பரிசோதனை செய்து நெல் ரகத்திற்கு ஏற்ப, சிபாரிசு செய்யப்பட்ட உரங்களை இடவேண்டும். மண் பரிசோதனை செய்யாமல் அதிக தழைச்சத்து உரங்களை பயன்படுத்துவதாலும் நெல் பயிர் அதிக வளர்ச்சியடைந்து அறுவடையின் போது நெல் பயிர்கள் தரையில் சாய்கிறது. எனவே விவசாயிகள் மண் பரிசோதனை செய்து அதன் படி உரங்களை <பயன்படுத்தவேண்டும், என்றார்.

**விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டவாழை விவசாயிகள் கணக்கெடுப்பு**

தேனி:தேனி மாவட்டத்தில் விலை வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளின் விபரங்கள் குறித்து கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது.தேனி மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில் வாழை சாகுபடி நடந்து வருகிறது. பெரும்பாலும் ஜி.9 ரக வாழைகளே சாகுபடி செய்யப்படுகின்றன. இந்த வாழை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட போது, அதிகளவு விலை கிடைத்தது. வாழை சாகுபடி செய்யப்பட்ட விவசாயிகள், அதிகளவு லாபம் சம்பாதித்தனர்.

ஆந்திரா, கர்நாடகா, மத்தியபிரதேச மாநிலங்களிலும் விவசாயிகள் ஜி.9 வாழை சாகுபடி செய்ய தொடங்கினர். அங்கிருந்தும் வெளிநாடுகளுக்கு வாழை அனுப்பி வைக்கப்பட்டதால், தேனி மாவட்டத்தில் வாங்குவதை வியாபாரிகள் குறைத்து கொண்டனர். இதனால் விலை கடுமையாக குறைந்தது. வாழைத்தார்களை ரோட்டில் வெட்டி எறியும் அளவிற்கு விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளாகினர். இதனை தொடர்ந்து வாழை சாகுபடி செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என தேனி மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன், கலெக்டர் வெங்கடாச்சலத்திடம் மனு கொடுத்தார்.

கலெக்டர் உத்தரவின் பேரில் மாவட்டத்தில் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை, அவர்கள் சாகுபடி செய்துள்ள பரப்பு, விலை வீழ்ச்சியில் ஏற்பட்டுள்ள இழப்பு போன்ற விபரங்களை தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

இந்த விபரங்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அரசு வழங்கும் வழிகாட்டுதல் அடிப்படையில் இழப்பீடுகள் வழங்கப்படும் வாய்ப்புகள் உள்ளது என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அரசு மானியத்துடன் தீவனபயிர் அபிவிருத்தி திட்டம் :கலெக்டர் தகவல்

சிவகங்கை:""மாவட்டத்தில் லாபகரமான பால் உற்பத்திக்கு அரசு மானியத்துடன் கூடிய தீவனப்பயிர் அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்படும்," என கலெக்டர் எஸ்.மலர்விழி தெரிவித்தார். அவர் கூறியதாவது: கால்நடைகளின் வளர்ச்சிக்கு தீவனம், பசுந்தீவனம் அவசியம். பால் உற்பத்தியை பெருக்க, தேவையான அளவு பசுந்தீவனம் தேவை. கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவினத்தில் 70 சதவீதம் தீவனம், பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது.

தீவன்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையில்,அரசு கடந்த 4 ஆண்டாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்துகிறது.விவசாயிகள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன், கால்நடைத்துறை மூலம் நடப்பு நிதி ஆண்டில் மானியத்துடன் கூடிய தீவனபயிர் சாகுபடி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.இறவையில் பல்லாண்டு தீவன சோளம் 29 மற்றும் வேலிமசால் தீவனப்பயிர் 0.25 ஏக்கரில் சாகுபடி செய்ய தீவன விதைகள் வழங்குதல். மானாவாரியில் 0.25 ஏக்கரில் தீவனச்சோளம் மற்றும் தீவன தட்டைப்பயறு சாகுபடி செய்திட தீவன விதைகள் வழங்குதல். தெளிப்பு நீர்பாசன கருவிகள் நிறுவ விவசாயிகளுக்கு ரூ.18,750 மானியம் வழங்கப்படும்.

மரவகை தீவனத்தின் முக்கியத்தை உணர்த்த வெல்வேல், பூவரசு, கிலைரிசிடியா, வாகை, கல்யாண முருங்கை, வேம்பு, கொடுக்காபுலிபோன்ற மர கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்குதல்.

மரவகை தீவனப்பயிர் உற்பத்தியை பெருக்குதல் மூலம் கோடை மற்றும் தீவன பற்றாக்குறை காலங்களில் தீவனம் கிடைக்க செய்தல். அசோலா திடல் அமைக்க ரூ.1,600 மானியம்.

தீவனப்பயிர் அதிகளவில் கிடைக்கும் காலங்களில் அவற்றை சேகரித்து பதப்படுத்தி, ஊறுகாய் புல் ஆக கால்நடைகளுக்கு தீவனப்பற்றாக்குறை காலங்களில் வழங்க, 250 கிலோ கொள்ளளவு உடைய 4 சைலேஜ் பைகள் ஒரு விவசாயிக்கு ஊறுகாய் புல் தயாரித்திட இலவசமாக வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் கால்நடை உதவி மருத்துவரிடம் விண்ணப்பிக்கலாம். தாழ்த்தப்பட்ட, பழங்குடியின பயனாளிகளுக்கு 30 சதவீத தேர்வு இருக்கும், என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வைகை, அமராவதி அணைகளில் நீர்திறக்க தமிழக முதல்வர் உத்தரவு**



வைகை அணை மற்றும் அமராவதி அணைகளில் இருந்து நீர் திறக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டுள்ளார்.
இது குறித்து முதல்வர் ஜெயலலிதா அவர்களின் அறிக்கையில்,
1) தேனி மாவட்டத்திலுள்ள வைகை அணையிலிருந்து பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பெரியாறு பாசனப் பகுதியில் உள்ள இருபோக பாசன நிலங்களின் முதல் போக பாசனத்திற்கு வைகை அணையிலிருந்து 15.7.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.
இதனால், திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களில் உள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும்;
2) திருப்பூர் மாவட்டத்திலுள்ள அமராவதி அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடக் கோரி அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.
வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு 15.7.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் உத்தரவிட்டுள்ளேன். இதனால், திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் உள்ள 47,117 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

## தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு

வெப்பசலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் இன்று மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது:-

வெப்பசலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் இன்று (செவ்வாய்க்கிழமை) மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையை பொறுத்தமட்டில் வானம் பகுதியாக மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்வதற்கு

வாய்ப்பு உள்ளது.நாளை (புதன்கிழமை) மலைப்பிரதேச பகுதிகளை உள்ளடக்கிய நீலகிரி, கோவை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்வதற்கு வாய்ப்பு உள்ளது. தற்போது நிலவும் வெயில் படிப்படியாக அடுத்த சில நாட்களில் குறைந்துவிடும். என்று கூறியுள்ளனர்

### புவி வெப்பமயமாதல் குறித்த குறும்படம் ஜூலை 19-இல் திரையீடு

பெங்களூரு தமிழ்ச் சங்கம் சார்பில், பெங்களூரில் வருகிற 19ஆம் தேதி புவி வெப்பமயமாதல் குறித்த குறும்படம் திரையிடப்படுகிறது.

இதுகுறித்து பெங்களூரு தமிழ்ச் சங்கம் வெளியிட்ட அறிக்கை:

பெங்களூரைச் சேர்ந்த சங்கர் ராஜ்குமார் தலைமையிலான இளைஞர்கள் இணைந்து புவி வெப்பமயமாதல் குறித்து தயாரித்துள்ள பாகமண்டலம், சர்வதேச திரைப்பட விழாவில் தேர்வான மனிதக் கிரகணம் ஆகிய குறும்படங்களை பொதுமக்களுக்கு திரையிட பெங்களூரு தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

பெங்களூரு தமிழ்ச் சங்க வளாகத்தில் வருகிற 19-ஆம் தேதி மாலை 4 மணிக்கு இந்த குறும்படங்கள் திரையிடப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மானிய விலையில் விதை நெல் விநியோகம்

மதுரை மாவட்டம், பெரியாறு பாசனத் திட்டத்தின் முதல் போகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளதை அடுத்து, அலங்காநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் முதல்போக சாகுபடிக்காக அரசு மானியத்தில் விதை நெல் விநியோகம் நடைபெற்று வருகிறது.

இதற்காக, குறுகிய கால நெல் ரகங்களான என்.எல்.ஆர்., ஏ.எஸ்.டி. 16 ஆகியன அரசு மானியத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதனை, இப்பகுதி விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு, வேளாண்மை உதவி இயக்குநர் ராமலெட்சுமணன் அறிவுறுத்தியுள்ளார்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

தேனி மாவட்டத்தில் புதன்கிழமை(ஜூலை 15) முதல் 31-ஆம் தேதி வரை 12 இடங்களில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கால்நடை பாதுகாப்புத் திட்ட சிகிச்சை முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் ஜூலை 15-ஆம் தேதி துரைச்சாமிபுரம் மற்றும் தப்புக்குண்டு, 17-ஆம் தேதி தர்மாபுரி, 23-ஆம் தேதி ஜல்லிப்பட்டி, 24-ஆம் தேதி அம்பாசமுத்திரம், 25-ஆம் தேதி சோத்துப்பாறை மற்றும் சத்திரபட்டி, 27-ஆம் தேதி பரமத்தேவன்பட்டி, 28-ஆம் தேதி சக்கரப்பட்டி, 30-ஆம் தேதி கைலாசபட்டி மற்றும் சிவிலிங்கநாயக்கன்பட்டி, 31-ஆம் தேதி சோலைத்தேவன்பட்டி ஆகிய இடங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட சிகிச்சை முகாம் நடைபெறுகிறது. விவசாயிகள் தங்களது கால்நடைகளை முகாமுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை பெற்று பயனடையலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**வேப்பம் புண்ணாக்கு கலந்த யூரியா விற்பனைக்கு அறிமுகம்**

பயிர்களுக்கு தழைச்சத்து முழுமையாக கிடைக்கும் வகையில் வேப்பம் புண்ணாக்கு கலந்த யூரியா உரக் கடைகளில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து தேனி வேளாண்மை தரக் கட்டுப்பாடு துறை அலுவலர்கள் கூறியது: யூரியா உரம் பயிர் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்படுகிறது. யூரியாவில் 46 சதவீதம் நைட்ரஜன் எனும் தழைச்சத்து உள்ளது. தற்போது 50 கிலோ எடையுள்ள யூரியா மூடை ரூ.271-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த உரத்தை அப்படியே பயன்படுத்தும் போது, 30 முதல் 35 சதவீதம் மட்டுமே பயிர்களைச் சார்கிறது. 50 சதவிகிதத்துக்கும் மேல் காற்றிலும், மண்ணிலும் கலந்து வீணாகிறது.

இதைத் தவிர்க்க ஒரு மூடை யூரியா உரத்துடன் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து பயிருக்கு அளிக்க வேண்டும். வேப்பம் புண்ணாக்கு கலப்பதால் யூரியா தண்ணீரில் கரையும் நேரம் நீட்டிக்கப்படுகிறது. தற்போது உரம் தயாரிப்பு நிறுவனங்கள் வேப்பம் புண்ணாக்கு கலந்த யூரியா உரத்தை தயாரித்து விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளன.

மாவட்டத்தில் வேப்பம் புண்ணாக்கு கலந்த யூரியா உரம் 500 டன் அளவில் இருப்பு வைக்கப்பட்டு, உர விற்பனைக் கடைகள் மூலம் 50 கிலோ எடையுள்ள மூடை ரூ.284-க்கு விற்பனை செய்யப்படுகிறது. வேப்பம் புண்ணாக்கு கலந்த யூரியா உரத்தை விவசாயிகள் தயக்கமின்றி வாங்கி பயன்படுத்தலாம்.அரசு நிர்ணயித்துள்ளதை விட கூடுதல் விலைக்கு உரம் விற்பனை செய்வோர் குறித்து அந்தந்த பகுதிகளில் உள்ள வட்டார வேளாண்மை அலுவலர்களிடம் புகார் தெரிவிக்கலாம் என்றனர்.

**பயிர் காப்பீடு: விவசாயிகள் விண்ணப்பிக்க தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் அறிவுறுத்தல்**

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள், இந்த ஆண்டு காரிப் பருவத்துக்கான 20 பயிர்களுக்கு காப்பீடு செய்யலாம் என தேசிய வேளாண் காப்பீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்நிறுவனம் வெளிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, நெல் (கார், குறுவை, சொர்ணவாரி) பயிருக்கு காப்பீட்டு திட்டத்தில் கடன் பெறாத விவசாயிகள் ஜூலை 31 க்குள் அல்லது பயிருக்கான விதைப்பு மற்றும் நடவு ஒரு மாத காலத்துக்குள் இருப்பின் எது முந்தையதாக உள்ளதோ அதன்படி காப்பீடு செய்து கொள்ளலாம். கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயிறு, நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி, பருத்தி, உருளை, வெங்காயம், அன்னாசி, மஞ்சள், வாழை, மர வள்ளி ஆகிய பயிர்களுக்கு செப்.15 க்குள் அல்லது பயிருக்கான விதைப்பு மற்றும் நடவு ஒரு மாத காலத்துக்குள் இருப்பின் எது முந்தையதோ அதன்படி காப்பீடு செய்து கொள்ளலாம். நெல் (சம்பா, தாளடி, பிசானம்), கரும்பு பயிர்களுக்கு டிச.15க்குள் காப்பீடு செய்து கொள்ளலாம்.

கூடுதல் மதிப்பீட்டுக்கான பிரிமியத் தொகையை பயிர்க்கடன் பெறா விவசாயிகள் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். பயிர்க் கடன் பெற்ற விவசாயிகள் கடன் பெற்ற வங்கி மூலமே இத்திட்டத்தில் சேர வேண்டும். இயற்கை சீற்றங்களான வறட்சி, வெள்ளம் ஏற்படுமாயின் மேற்குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே பிரிமியம் பெறுவது நிறுத்தப்படலாம். விவசாயிகள் இத்திட்டத்தில் சேர முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள வேளாண் அலுவலகம்

அல்லது கூட்டுறவு, வர்த்தக வங்கிகளில் பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கோழிப்பண்ணைகள் அமைக்க விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்**

விருதுநகர் மாவட்டத்தில் அரசு மானியத்துடன் கோழிப்பண்ணைகள் அமைக்க தொழில் முனைவோர் மற்றும் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பம் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஆட்சியர் வே.ராஜாராமன் திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கோழிப்பண்ணைத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் கோழி வளர்ப்பு திட்டத்தினை அரசு 2012-13 முதல் தீவிரமாக செயல்படுத்தி வருகிறது. அதில், விருதுநகர் மாவட்டத்தில் நிகழாண்டில் 50 கோழிப்பண்ணைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் வங்கி கடனுதவியுடனும், சுயமூலதனம் மூலமும் 5 ஆயிரம் எண்ணிக்கை கொண்ட இறைச்சி கோழிப்பண்ணைகள் அமைக்க விருப்பம் உள்ளவர்களுக்கு அரசின் சார்பில் கொட்டகை அமைக்க 25 சதவீதம் மானியம் அளிக்கப்படும்.

கிராம ஊராட்சிகளைச் சேர்ந்த விவசாயிகள், தனிநபர், தொழில் முனைவோர் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். கோழிப்பண்ணை அமைக்க போதிய நிலம் விண்ணப்பதாரர் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலோ இருக்க வேண்டும். கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ளவர்களும், புதிய கொட்டகை அமைத்து விரிவாக்கம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளும் இத்திட்டத்தில் பயனடையலாம். ஏற்கெனவே இத்திட்டத்தில் பயனடைந்தவர்கள் மீண்டும் பயன்பெற இயலாது.

இதில், தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் பயிற்சி மையங்களில் 3 நாள்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும். மேலும், இப்பண்ணை அமைக்க தேர்வு பெற்றவர்கள் 60 நாள்களுக்குள் கொட்டகை அமைப்பது அவசியம் ஆகும்.

இந்த தகுதியும் ஆர்வமும் உடையோர் ஆட்சியரால் அங்கிகாரம் பெற்ற ஒருங்கிணைப்பாளரின் கடிதம், வங்கியிலிருந்து கடன் வழங்க ஒப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கான சான்றுயுடன் வருகிற 31-ம் தேதிக்குள் விண்ணப்பங்களை விருதுநகர் மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது அஞ்சல்

மூலமோ அனுப்பி வைக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கோவையில் ஆகஸ்ட் 16-இல் நீராதாரப் பாதுகாப்பு மாநாடு

கோவையில் ஆகஸ்ட் 16-ஆம் தேதி கொங்கு மண்டல நீர்வழிப் பாதை பாதுகாப்பு மாநாடு நடத்த விவசாயிகள் ஆலோசனைக் கூட்டத்தில் திங்கள்கிழமை முடிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட தலைவர் சு.பழனிசாமி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் கோவையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆகஸ்ட் 16-ஆம் தேதி கோவையில் நீராதாரப் பாதுகாப்பு மாநாடு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. மேலும், இம்மாநாட்டில் கொங்கு மண்டல நீராதார நிலவரம் தொடர்பாக புத்தகம் வெளியிடப்படவுள்ளது.

நொய்யல் - நேற்று இன்று நாளை என்ற குறும்படம் வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில், கட்சி சார்பற்ற ஜனதா தளத்தின் மாநிலத் தலைவரும், தமிழக விவசாயிகள் சங்கத் தலைவருமான காளப்பட்டி பொன்னுசாமி, தமிழக விவசாயிகள் சங்கம் ( கட்சி சார்பற்றது) டாக்டர் தங்கராஜ், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் சின்னராஜ், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட துணைத் தலைவர் தங்கவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## எஸ்.எஸ்.குளம் வட்டார விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறையினர் அழைப்பு

எஸ்.எஸ்.குளம் வட்டார விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறையினர் 2015-2016-ஆம் ஆண்டிற்கான திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள அழைப்பு விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, எஸ்.எஸ்.குளம் வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் பி.வி.பிரேம்குமார் கூறியதாவது:

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் வீரிய காய்கறிகள், வாழை மற்றும் காய்கறி நிலத்தில் நிலப்போர்வை அமைத்தல், அடர் நடவு, உயர் ரக கொய்யா, மிளகாய், திசு வாழை நடவு, உதிரி மலர்கள், தேனீக்கள் வளர்ப்பு மற்றும் கோகோ பயிர்கள் விரிவாக்கம், தேசிய நீடித்த வேளாண்மை இயக்கத்தின்கீழ் தோட்டக்கலை சார்ந்த பண்ணை,

மண்புழு உரக்கூடம், மண்புழு படுக்கை அமைக்கும் திட்டம் ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
நுண்நீர் பாசனத் திட்டத்தின்கீழ் வாழை, காய்கறிகள், மற்றும் வாழைப் பயிர்களுக்கு சொட்டுநீர்ப் பாசனம் அமைத்தல் உள்ளிட்ட திட்டங்களுக்கு சர்க்கார் சாமக்குளம் வட்டாரத்திற்கு அரசு மானியமாக ரூ. 23 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.
எனவே, எஸ்.எஸ்.குளம் வட்டாரத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் தோட்டக்கலைத் துறையின் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றார்.

## பொங்கலூர் பகுதியில் வெங்காயம் அறுவடை

பொங்கலூர் பகுதிகளில் வெங்காய அறுவடை முன்கூட்டியே துவங்கியுள்ளது. இதற்கு நல்ல விலை கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
பல்லடம் அருகே பொங்கலூர் வட்டாரப் பகுதியில் கடந்த வைகாசிப் பட்டத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டது. இதன் அறுவடை காலம் 2 மாதங்கள் ஆகும். ஆடி மாதத்தில் சின்னவெங்காயம் அறுவடைக்கு வரும். அப்போது விளைச்சல் அதிகரிப்பால் சந்தைக்கு வரத்து அதிகரித்து சின்னவெங்காயத்தின் விலை குறைவது வழக்கம்.
இதை கருத்தில் கொண்டு, சில விவசாயிகள் வைகாசி மாதத்துக்கு முன்பே சித்திரை மாதத்தில் சின்ன வெங்காயம் நடவு செய்தனர். அதனால், முன்கூட்டியே சின்ன வெங்காயம் தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகிறது.
கடந்த பங்குனி மாதத்தில் வெங்காய அறுவடையின் போது கிலோ ரூ. 12 ஆக இருந்த சின்ன வெங்காயம் அறுவடை முடிந்தவுடன் கிலோ ரூ. 25 ஆக அதிகரித்து, பின்னர் படிப்படியாக விலை உயர்ந்து கிலோ ரூ. 45 ஆகவும், சில்லறையில் ரூ. 60 வரையிலும் விற்பனையானது. தற்போது அறுவடை துவங்கியுள்ள நிலையில், சில்லறை விற்பனையில் கிலோ ரூ. 50-க்கு விற்கப்படுகிறது. இன்னும் சில வாரங்களில் வெங்காய அறுவடை அதிகரித்து, சந்தைக்கு வரத்தும் அதிகரித்தால், அதன் விலை வீழ்ச்சி அடைய வாய்ப்புள்ளது. எனவே, தற்போது அறுவடையாகும் வெங்காயத்தை லாபத்துக்கு உடனுக்குடன் விற்பனை செய்து வருகின்றனர் விவசாயிகள்.

இதுகுறித்து வாவிபாளையம் விவசாயி பி.சோமசுந்தரம் கூறியது.

பொங்கலூர் வட்டார விவசாயிகள், விலை வீழ்ச்சியைத் தவிர்க்கவும், வெளிசந்தையில் வெங்காயத் தட்டுப்பாட்டை போக்கவும் முன்கூட்டியே வெங்காய நடவு செய்தனர்.

சில நேரங்களில் கோடை வெயில் அதிகமாகி, வெங்காயம் கருகி முதலீட்டுக்கே மோசம் ஏற்படும். ஆனால், இந்தாண்டு நல்ல பருவகாலம் நிலவியதால் வெங்காய நடவின்போது கோடை மழை கைகொடுத்து, தண்ணீர் பற்றாக்குறை இன்றி வெங்காயச் சாகுபடி சிறப்பாக உள்ளது. இதனால், விவசாயிகளுக்கு நல்ல வருமானமும் கிடைத்து வருகிறது என்றார்.

**காலிபிளவர் விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**

காலிபிளவர் விலை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பல்லடம், பொங்கலூர் பகுதிகளில் அதிக அளவில் காலிபிளவர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இது, அதிகம் வெயில் இல்லாத இதமான சீதோஷ்ண நிலையில் நன்கு வளரும் இயல்புடையது. இப்பகுதிகளில், ஆண்டு முழுவதும் காலிபிளவர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வெயில் அதிகமாக இருக்கும் காலத்தில் காலிபிளவர் செடிகளில் புழுத் தாக்குதல் அதிகரித்து

விளைச்சல் பாதிக்கப்படும். கடந்த மாதம் விளைச்சல் குறைவாக இருந்ததால் காலிபிளவர் ஒன்றின் விலை ரூ. 30 வரை விற்கப்பட்டது.

தற்போது, மாசி பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட காலிபிளவர் சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளது. இதன் வரத்து அதிகரித்து வருவதால் விலையும் குறைந்து வருகிறது. தற்போது, காலிபிளவர் ஒன்றின் விலை ரூ. 20-க்கு விற்கப்படுகிறது.

மேலும் வரத்து அதிகரிக்கும்பட்சத்தில் விலை மேலும் குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர். இதனால், காலிபிளவர் சாகுபடி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**கறவைப் பசு, வெள்ளாடு வழங்க 3,484 பயனாளிகள் தேர்வு**

கடலூர் மாவட்டத்தில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தமிழக முதலமைச்சரின் விலையில்லா கறவை பசு, வெள்ளாடுகள் வழங்க 3,484 பயனாளிகளைத் தேர்வு செய்வதற்கான கிராம அளவிலான குழுக்கூட்டம் கடலூரில் திங்கட்கிழமை நடைபெற்றது.

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் சி.எஸ்.இராஜாசிதம்பரம் தலைமை வகித்தார். திட்டத்தின் கீழ் ஜுலை, ஆகஸ்ட் மாதத்தில் 10 கிராமங்களில் 500 பேருக்கு 500 கறவை மாடுகளும், 65 கிராமங்களில் 2,984 பேருக்கு ஆடுகளும் வழங்க முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி, இத்திட்டத்தில் முக்கியப் பயனாளியாக மகளிர் இருப்பர். இதில் அரவாணிகள், குடும்ப பொறுப்பை கவனித்து வரும் பெண், விதவை, ஆதரவற்றோர், ஊனமுற்றோர், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலும், இத்திட்டம் செயல்படவுள்ள கிராமங்களில் வரும் 16-ம் தேதி சிறப்பு கிராமசபா கூட்டம் நடத்தி விண்ணப்பங்களைப் பெறவும், தகுதிவாய்ந்த பயனாகளின் பட்டியலை இறுதி செய்து வரும் 24-ம் தேதி சிறப்பு கிராமசபா கூட்டம் நடத்தி உறுதிப்படுத்தவும் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

**மீனவர்களுக்கு வழிகாட்டு நெறிமுறைப் பயிற்சி**

சிறு மீனவர்களின் நீடித்த வாழ்வாதாரத்துக்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த 2 நாள் சர்வதேச பயிற்சி பட்டறை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு புதுச்சேரி, புதுக்குப்பம், ஓட்டல் கைலாஷ் ரிசார்ட்டில் தொடங்குகிறது.

உலக மீனவர் பேரவை மற்றும் தேசிய மீனவர் பேரவை இணைந்து நடத்தும் இந்நிகழ்ச்சியை, ராதாகிருஷ்ணன் எம்பி தொடங்கி வைக்கிறார்.

இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பாகிஸ்தான், இலங்கை, தென்ஆப்பிரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் மீனவ தலைவர்களும், இந்தியாவின் தமிழ்நாடு, கேரளம், மகாராஷ்டிரம், கோவா, கர்நாடகம், ஒடிஸா, ஆந்திரம், புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த தேசிய மீனவர் பேரவைத் தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

## குமரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துக்கு ரூ. 2.34 கோடி நிதி

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துக்கு நபார்டு வங்கி மூலம் ரூ. 2 கோடியே 34 லட்சம் நிதி வழங்கப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் திங்கள்கிழமை தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் ரூ. 14 லட்சம் மதிப்பீட்டில் நடைபெறவுள்ள புனரமைப்பு பணிகளையும், அதே வளாகத்தில் ரூ. 6 லட்சம் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் கூடிய நவீன பாலகம் கட்டும் பணியையும் தொடங்கி வைத்த மாவட்ட ஆட்சியர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

குமரி மாவட்ட மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் தரமான பாலை ஆவின் நிறுவனம் விநியோகித்து வருகிறது. பாலின் தரத்தை மேம்படுத்திட புதிய இயந்திரங்கள் வாங்கவும், கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டடத்தை புதுப்பிக்கவும், நபார்டு வங்கியின் நிதியிலிருந்து ரூ. 2 கோடியே 34 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. குழித்துறை, கன்னியாகுமரி, நாகர்கோவில் உழவர்சந்தை ஆகிய இடங்களில் மேலும் பாலகங்கள் திறக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட பால்வளத் தலைவர் எஸ்.ஏ. அசோகன், மாநில சிறுபான்மையினர் பிரிவு நலத் தலைவர் ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் எம்.எஸ். சாரதாமணி, கூட்டுறவு ஒன்றியத் தலைவர் சந்தோஷ், ஆவின் துணைப் பொதுமேலாளர் கணேசன், பொதுமேலாளர் சுந்தரமகாலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்.

## சூளாமலையில் நாளை கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்

பர்கூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட சூளாமலை கிராமத்தில் புதன்கிழமை (ஜூலை 15) கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடைபெறுகிறது.இதுகுறித்து கிருஷ்ணகிரி கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் தேவராஜன், திங்கள்கிழமை வெளியிட்ட செய்திகுறிப்பு: தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால்நடைகள், கால்நடை மருத்துவ சேவை எளிதில் கிட்டாத கிராமங்களில் உள்ள விவசாயிகளால் வளர்க்கப்படும்

கால்நடைகளுக்கான பாதுகாப்புத் திட்ட முகாம் நடத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியம், சூளாமலை கிராமத்தில் புதன்கிழமை நடைபெறும் பாதுகாப்புத் திட்ட முகாமை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தொடக்கி வைக்கிறார். இந்த முகாமில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்க மருந்தூட்டல், தடுப்பூசி பணிகள், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சை பணிகள் போன்ற பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படும். மேலும், கன்றுகள் பேரணி நடத்தி, சிறப்பாக பராமரிக்கப்படும் கன்றுகளின் உரிமையாளர்களுக்கு கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு பரிசுகளும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

### பலத்த மழை: மக்கள் மகிழ்ச்சி

திருவண்ணாமலை, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் திங்கள்கிழமை மாலை பெய்த பலத்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மாவட்டம் முழுவதும் கடந்த சில நாள்களாக அனல் காற்று வீசி வருகிறது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இந்த நிலையில், திங்கள்கிழமை மாலை பலத்த மழை பெய்தது. மாலை 5 மணிக்கு பெய்ய தொடங்கிய மழை ஒரு மணி நேரம் நீடித்தது. திருவண்ணாமலை, வேங்கிக்கால், அடி அண்ணாமலை, ஆட்சியர் அலுவலகம், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பெய்த மழையால், சாலைகளில் மழைநீர்ப் பெருக்கெடுத்தது.

### தேங்காய்க்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை தேவை

தேங்காய்க்கு உரிய விலை கிடைக்க இந்தியாவில் பார்ம் கர்னல் ஆயில் மற்றும் தேங்காய் குருடாயிலுக்கு தடை விதிக்க வேண்டும் என்று தென்னை உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரூரில் அச்சங்கத்தின் மாநிலச் செயலர் பி. செல்லத்துரை, தலைவர் சக்திவேல் ஆகியோர் கூறியது:

உலகளவில் தென்னை பொருள் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. இங்குதான் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 31.1 சதம் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் இத்தொழிலை நம்பி 6 லட்சம் விவசாயக் குடும்பங்கள் உள்ளன.

இந்நிலையில் கடந்த மே மாதம் டன்னுக்கு ரூ.31,000 ஆக இருந்த தேங்காய் விலை தற்போது பாதியாகக் குறைந்து ரூ.15,000-க்கு விற்கப்படுகிறது. இதனால் தென்னை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தேங்காய் விலை குறைவுக்கு பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பார்கர்னல் ஆயிலுக்கு, தேங்காய் குருடாயிலுக்கு விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரியை கடந்த 2013-ல் மத்திய அரசு நீக்கியதுதான். இதனால் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் பெரிய நிறுவனங்கள் அந்நாடுகளில் இருந்து இறக்குமதியாகும் எண்ணெய்யை சுத்திகரித்து சந்தையில் விற்கத் தொடங்கியுள்ளன. இதனால் தமிழகத்தில் உள்ள தேங்காய்கள் தேக்கம் கண்டுள்ளன. எனவே மத்திய அரசு பாம்கர்னல் ஆயில், தேங்காய் குருடாயில் இறக்குமதிக்குத் தடை விதிக்க வேண்டும், இல்லையேல் வரி விதிக்க வேண்டும்.

கேரளத்தில் தென்னை பதனீர் நொதியாவதை தடுக்கும் வகையில் (ஆண்டிபெர்மெண்டேசன் சொலூயுசன்) என்னும் வேதிப்பொருள் கலந்து அங்கு தென்னை பதனீர் விற்கப்படுகிறது. அதே போல தமிழகத்திலும் விற்க அனுமதிக்க வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி மக்களவை துணைத் தலைவர் மு. தம்பிதுரையை சந்தித்து மனு கொடுத்துள்ளோம். அவரும் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சரை சந்தித்து உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளார் என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## பயிர் காப்பீடு திட்டம்: கடன் பெறாத விவசாயிகள் சேர வருகிற 31-ந் தேதி கடைசி நாள்




2015-ம் ஆண்டிற்கான நெல்பயிருக்கு காப்பீடு திட்டத்தில் கடன் பெறாத விவசாயிகள் சேர்வதற்கு வருகிற 31-ந்தேதி கடைசி நாளாகும் என்று தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு கழக தலைமை மண்டல மேலாளர் தெரிவித்துள்ளார்.

பயிர்காப்பீடு

தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு கழகத்தின் தலைமை மண்டல மேலாளர் பாரதி வஜ்ரவேலு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வேளாண்மை காப்பீட்டு கழகத்தின் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 2015-ம் ஆண்டு காரீப் பருவத்திற்கான வேளாண்மை காப்பீடு திட்டத்தினை செயல்படுத்த உள்ளது. இதில் நெல்பயிருக்கு காப்பீடு திட்டத்தில் கடன் பெறாத விவசாயிகள் சேர்வதற்கு வருகிற 31-ந்தேதி கடைசி நாளாகும். இது போல கம்பு, சோளம், ராகி, மக்காசோளம், துவரை, உளுந்து, பச்சைப்பயிறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, பருத்தி, உருளை கிழங்கு, வெங்காயம், அண்ணாச்சிபழம், மஞ்சள், வாழை, மரவள்ளிக்கிழங்கு ஆகிய பயிர்களுக்காக காப்பீடு திட்டத்தில் சேர செப்டம்பர் 15-ந்தேதி கடைசி நாள் ஆகும். பயிர் கடன் பெறாத

விவசாயிகள் காப்பீட்டு தொகை செலுத்த சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெற்று தங்கள் சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் வங்கிகளில் செலுத்த வேண்டும்.
மகசூல் சோதனை

பயிர் கடன் பெறும் விவசாயிகள் தங்கள் பயிர் கடன் பெற்ற வங்கியிலேயே இந்த திட்டத்தில் வங்கியின் மூலம் சேர்க்கப்படுவார்கள். இந்த திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட யூ.என்., பிர்காவில் மாநில அரசின் விவசாய துறையினர் பயிர் அறுவடை காலத்தில் அறுவடை சோதனை நடத்தி நடப்பு பருவத்தின் சராசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டுகால உத்தரவாத மகசூலோடு ஒப்பிட்டு பார்த்து மகசூல் எந்த அளவு குறைந்து உள்ளதோ அந்த விகிதப்படி காப்பீடு செய்த விவசாயிகளுக்கு, அவரவர் தொகைக்கு ஏற்ப நஷ்டஈடு வழங்கப்படும்.

இயற்கை சீற்றங்கள் ஏதேனும் ஏற்பட்டால் காப்பீடு தொகை பெறுவது கடைசி தேதிக்கு முன்பாக நிறுத்தப்படும். இது தொடர்பான மேலும் விவரங்களை சென்னை, பாரிமுனை கம்பு செட்டித் தெருவில் உள்ள வேளாண் காப்பீட்டு தலைமை மண்டல மேலாளர் அலுவலத்தை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

## நீர்வரத்து மீண்டும் அதிகரிப்பு: மேட்டூர் அணை நீர்மட்டம் 85 அடியாக உயர்வு



மேட்டூர் அணை நீர்மட்டம் 85 அடியாக உயர்ந்தது. இந்த நிலையில் அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரித்து உள்ளது.

நீர்மட்டம் உயர்வு

கர்நாடக மாநிலத்தில் பருவமழை தீவிரம் அடைந்ததின் காரணமாக கடந்த மாதம் முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. இதில் அதிகபட்சமாக வினாடிக்கு 19 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் வந்தது. இந்த நிலையில் கர்நாடகாவில் மழை குறைந்ததால், அங்குள்ள அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டது.இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறைந்து கொண்டே சென்றது. நேற்று முன்தினம் அணைக்கு வினாடிக்கு 2 ஆயிரத்து 900 கனஅடியாக குறைந்தது. இருப்பினும் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படும் நிலையில், நீர்வரத்து தண்ணீர் திறப்பைவிட அதிகமாக இருந்ததால் அணையின் நீர்மட்டம் மெதுவாக உயர்ந்து கொண்டே வருகிறது. இதன் அடிப்படையில், நேற்றைய நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 85.03 அடியாக உயர்ந்தது.

நீர்வரத்து அதிகரிப்பு

இந்த நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்திற்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டு உள்ளது. இதன் காரணமாக நேற்று முதல் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரித்தது.

அதாவது, நேற்று காலை நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 4 ஆயிரத்து 924 கனஅடியாக அதிகரித்து உள்ளது. இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்குமானால் அணையின் நீர்மட்டம் மீண்டும் வேகமாக உயர வாய்ப்பு உள்ளது.

## தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த ரூ.54½ லட்சம் நிதி ஒதுக்கீடு; கலெக்டர் லட்சுமி தகவல்

விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டத்தில் தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த ரூ.54½ லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கலெக்டர் லட்சுமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>தீவன அபிவிருத்தி திட்டம்</u>

விழுப்புரம் மாவட்டத்தில் தீவன அபிவிருத்தி திட்டத்தை 22 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் தீவனப்பயிர், ஒரு பயனாளிக்கு 0.25 ஏக்கர் முதல் 1 ஏக்கர் வரையில் வளர்ப்பதற்காக 850 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.13 லட்சத்து 94 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மானாவரியில் 3 ஆயிரம் ஏக்கரில் தீவன சோளம் பயிர் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்காக ரூ.39 லட்சத்து 80 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீர் சேமிப்பு கருவியான மழைநீர் தெளிப்பான் 250 பேருக்கு ரூ.18 ஆயிரத்து 750 (75 சதவீதம்) மானியத்தில் அமைக்க இலக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கால்நடைகளின் புரத சத்தை அதிகரித்து பால் உற்பத்தியை பெருக்கிட ரூ.1,600 மானியத்தில் அசோலா வளர்ப்பை மேம்படுத்த 500 பேர் தேர்வு செய்து திட்ட செயலாக்கத்திற்கு ரூ.50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் கரும்பு உற்பத்தி அதிகம் உள்ளதால் அதன் சோகையை கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்துவதால் அதிகப்படியான கரும்பு சோகைகள், பசுந்தீவனங்கள் உற்பத்தி காலங்களில் ஊறுகாய்புல் தயாரித்து தீவன உற்பத்தி குறைவான மற்றும் கோடை காலங்களில் பயன்படுத்த 800 அலகு அமைக்க ரூ.24 ஆயிரமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எல்லா இனங்களிலும் 30 சதவீதம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

<u>விண்ணப்பிக்கலாம்</u>

ஆகவே இதுபோன்ற திட்டத்தில் இதற்கு முன் பயன்பெறாத கால்நடை வளர்ப்போர் இந்த திட்டத்தில் பயன்பெற தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள கால்நடை மருந்தக உதவி மருத்துவர்களை அணுகி புகைப்படம் ஒட்டிய உரிய விண்ணப்பத்துடன் குடும்ப அட்டை நகல், தீவனப்பயிர் வளர்க்க உள்ள நிலத்தின் அடங்கல் அல்லது பட்டா நகலுடன் வருகிற 31–ந் தேதிக்குள் சமர்பித்து திட்ட விளக்கங்களை தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

## 8 மாதத்தில் இல்லாத அளவு சில்லரை விலை பண வீக்கம் அதிகரிப்பு




புதுடெல்லி: சில்லரை விலை பண வீக்கம் கடந்த 8 மாதங்களில் இல்லாத அளவு அதிகரித்துள்ளது. நாட்டின் சில்லரை விலை பண வீக்கம் கடந்த மே மாதத்தில் 5.01 சதவீதமாக இருந்தது. இது ஜூன் மாதத்தில் 5.4 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது கடந்த 8 மாதங்களில் இல்லாத உயர்வாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பருப்பு வகைகள் விலை 22.24 சதவீதம் அதிகரித்துள்ளது. பால் பொருட்கள், புரதம் நிறைந்த இறைச்சி, மீன் அனைத்து வகையிலும் சேர்த்து உணவு பொருள் பண வீக்கம் 5.48 சதவீதமாக அதிகரித்துள்ளது.

## நிர்ணயித்த இலக்கை விட கோதுமை கொள்முதல் சரிவு




புதுடெல்லி,: இந்திய உணவு கழகம் நடப்பு ஆண்டில் 30 மில்லியன் டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது. இந்நிலையில் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான சீசனில் கோதுமை 27.6 மில்லியன் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 28 மில்லியன் டன் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பு ஆண்டுக்கான ஏப்ரல் -ஜூன் கோதுமை கொள்முதல் முடிந்து விட்டதாகவும், இவை குறைந்த பட்ச ஆதார விலை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதாகவும் இந்திய உணவு கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மார்ச் மாதத்தில் பெய்த பருவம் தப்பிய மழையால் பஞ்சாப், அரியானா, உத்தர பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் கோதுமை உற்பத்தி பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி,: இந்திய உணவு கழகம் நடப்பு ஆண்டில் 30 மில்லியன் டன் கோதுமை கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயித்திருந்தது. இந்நிலையில் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான சீசனில் கோதுமை 27.6 மில்லியன் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 28 மில்லியன் டன் கொள்முதல் செய்யப்பட்டது. நடப்பு ஆண்டுக்கான ஏப்ரல் -ஜூன் கோதுமை கொள்முதல் முடிந்து விட்டதாகவும், இவை குறைந்த பட்ச ஆதார விலை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதாகவும் இந்திய உணவு கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மார்ச் மாதத்தில் பெய்த பருவம் தப்பிய மழையால் பஞ்சாப், அரியானா, உத்தர பிரதேசம், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களில் கோதுமை உற்பத்தி பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கோடை வெயில் சுட்டெரிப்பதால் சாத்தனூர் அணை நீர்மட்டம் 72 அடியாக குறைந்தது குடிநீர் திட்டங்கள் பாதிக்கும் ஆபத்து

திருவண்ணாமலை, :கோடை வெயில் சுட்டெரிப்பதால் சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 72 அடியாக சரிந்துள்ளது. அணையின் நீர் இருப்பு குறைந்து வருவதால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.தென்பெண்ணையின் குறுக்கே அமைந்துள்ள சாத்தனூர் அணை பாசனத்தை நம்பியே, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் விவசாய சாகுபடி நடக்கிறது. மேலும், திருவண்ணாமலை நகராட்சி உள்ளிட்ட பல்வேறு குடிநீர் திட்டங்கள் அணையை நீராதாரத்தை மட்டுமே நம்பியிருக்கிறது.இந்நிலையில், இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து தற்போது வரை போதிய மழையில்லை. கோடை மழையும் கைகொடுக்கவில்லை. கர்நாடக மாநிலத்தில் இருந்து தென்பெண்ணையின் வழியாக நீர்வரத்தும் ஏற்படவில்லை. எனவே, இந்த ஆண்டு அணையின் நீர்மட்டம் ஒரு அடிகூட உயரவில்லை. மேலும், நேரடி பாசனத்துக்கும் தண்ணீர் திறக்கவில்லை.

இந்நிலையில், கோடை காலம் முடிந்த பிறகும் அக்னி நட்சத்திர வெயிலுக்கு இணையாக சுட்டெரிக்கும் கோடை வெயில் காரணமாக, அணையின் நீர் இருப்பு வெகுவாக சரிந்து வருகிறது. அணையின் நீர்மட்டம் நேற்று மாலை நிலவரப்படி மொத்தமுள்ள 119 அடிக்கு 72.75 அடியாக உள்ளது. அணையின் மொத்த நீர் கொள்ளளவான 7321 மில்லியன் கன அடியில், தற்போது 1007 மில்லியன் கன அடி மட்டுமே உள்ளது.

தொடர்ந்து அணையின் நீர்மட்டம் சரிந்து வருவதாலும், நீர்வரத்துக்கான வாய்ப்புகள் குறைந்திருப்பதாலும், விவசாயிகள் மட்டுமின்றி, சாத்தனூர் குடிநீர் திட்டங்களை நம்பியுள்ளவர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அணையின் நீர்மட்டம் மேலும் சில அடிகள் குறைந்தால், குடிநீர் திட்டங்களுக்கு சாத்தனூர் பிக்கப் அணையில் இருந்து குடிநீர் சப்ளை செய்வதில் சிக்கல் ஏற்படும் என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.

## அந்தியூர் விற்பனைக் கூடத்தில் ரூ.1.50 கோடிக்கு பருத்தி ஏலம்

அந்தியூர், : அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நேற்று விவசாய விளைபொருட்களின் ஏலம் நடைபெற்றது. அந்தியூர், பர்கூர்,

அத்தாணி, ஒலகடம், எண்ணமங்கலம், வெள்ளிதிருப்பூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விளைபொருள்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது.

பருத்தி பி.டி.காட்டன் ரகம் 10 ஆயிரம் மூட்டைகள் விற்பனைக்காக வந்தது. குவிண்டால் குறைந்த பட்சமாக ரூ.3 ஆயிரத்து 900, அதிகபட்சமாக ரூ.4 ஆயிரத்து 250-க்கு ஏலம் போனது. மொத்த விற்பனை ரூ.1.50 கோடிக்கு பருத்தி விற்பனையானது. 27 ஆயிரம் தேங்காய்கள் வந்ததில் சிறிய தேங்காய் ஒன்று ரூ.3.70க்கும், பெரிய தேங்காய் ரூ.8.25க்கும் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்திற்க்கு விற்பனையானது. கொப்பரைத் தேங்காய் 100 மூட்டைகள் வந்ததில் குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.5 ஆயிரத்து 215க்கும் அதிகபட்சம் ரூ.6 ஆயிரத்து 519க்கும் ரூ.2.50 லட்சத்துக்கு ஏலம் போனது. நிலக்கடலை 250 மூட்டைகள் வந்ததில் பச்சை குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.2 ஆயிரத்து 528க்கும் அதிகபட்சமாக ரூ.3 ஆயிரத்து 100க்கும், காய்ந்த நிலக்கடலை குறைந்தபட்சம் ரூ.5 ஆயிரத்து 300க்கும், அதிகபட்சமாக ரூ.6 ஆயிரத்து 400க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.4 லட்சத்துக்கு விற்பனையானது. 50 மூட்டை மக்காச்சோளம் குவிண்டால் குறைந்தபட்சம் ரூ.1,289க்கும், அதிகப்பட்சம் ரூ.1,369க்கும் ஏலம் போனது. 10 மூட்டை ஆமணக்கு குவிண்டால் ரூ.3 ஆயிரத்து 500க்கும், அதிகபட்சம் ரூ.3 ஆயிரத்து 600-க்கும் விற்பனையானது. விருதுநகர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, திருப்பூர், மேட்டுப்பாளையம், கோவை, தருமபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர்

## இலவச காளான் வளர்ப்பு பயிற்சி பெற அழைப்பு

ஈரோடு, :மத்திய அரசின் கிராமப்புற அமைச்சக வழிகாட்டுதலின்படி கனரா வங்கி தொழில் பயிற்சி நிலையம் நடத்தும் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி வரும் 20ம் தேதி முதல் 25ம் தேதி வரை 6 நாட்கள் நடைபெற உள்ளது. ஈரோடு பவானி ரோட்டில் அசோகபுரம் லட்சுமி தியேட்டர் அருகில் சரஸ்வதி வித்யாலயா பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ள இந்த இலவச காளான் வளர்ப்பு பயிற்சியில் விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், சுய உதவிக்குழுக்கள் கலந்து கொண்டு பயனடையலாம். பயிற்சி பெற விரும்புபவர்கள் தமிழில் எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

வயது வரம்பு இல்லை. மேலும் மதிய உணவு உட்பட அனைத்தும் இலவசம். பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு பயிற்சி நிலைய தொலைபேசி எண் 0424-2290338 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம் என கனரா வங்கி முதுநிலை மேலாளர் பூபாலன் தெரிவித்துள்ளார்.

**மத்திய அரசின் இறக்குமதி கொள்கையால் பட்டுக்கூடு விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் கோபி, கள்ளிப்பட்டி, பெருந்துறை, திங்களூர், காஞ்சிகோவில், கவுந்தப்பாடி சுற்றுப்புற பகுதிகளில் விவசாயிகளின் பகுதி நேர தொழிலாக பட்டுப்புழு வளர்ப்பு தொழில்திகழ்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டுப்புழுக்கூடு கர்நாடகா மாநிலம் கொள்ளேகால் பட்டுக்கூடு விற்பனை சந்தையில் ஏலம் மூலம் விற்பனை செய்கின்றனர். பட்டுக்கூடுகளின் விலை கடந்த சில வாரங்களுக்கு முன்பு வரையிலும் கிலோ ரூ.400 முதல் 500 வரை விற்று வந்தது. ஓரளவு லாபம் ஈட்டி வந்த விவசாயிகள் தற்போது பட்டுக்கூடுகளுக்கு போதிய விலை கிடைக்காததால் கடும் பாதிப்படைந்து வருகின்றனர். தற்போது, கிலோ ஒன்றுக்கு ரூ.250 ஆக பட்டுக்கூடுகளின் விலை குறைந்து விட்டது. இதன் காரணமாக பட்டுப்பூச்சி வளர்ப்பதில் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பட்டுக்கூடுகளின் திடீர் விலை சரிவுக்கு மத்திய அரசும் காரணமாக உள்ளதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர். முன்பு சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பட்டுக்கு மத்திய அரசு 40 சதவீதம் வரை இறக்குமதி வரி விதித்திருந்தது. தற்போது இறக்குமதி வரி படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது 10 சதவீதம் மட்டுமே இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறைந்த விலையில் வெளிநாடுகளில் இருந்து பட்டு இறக்குமதி செய்யப்படுவதால் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளின் விலையில் சரிவு ஏற்படுவதை தடுக்க முடியாமல் போய் விட்டது. இதன் காரணமாக பட்டு உற்பத்தி செய்யும் விவசாயிகள் மட்டுமின்றி பட்டு நெசவாளர்களும் பெரும் பாதிப்படைகின்றனர். எனவே மத்திய, மாநில அரசுகள் பட்டு பூச்சி வளர்க்கும் விவசாயிகளை பாதுகாக்கவும், பட்டு நெசவாளர்களை பாதுகாக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை விவசாயிகள் வலியுறுத்தி

வருகின்றனர். தற்போது பட்டுக்கூடு உற்பத்தியாளர்களும், பட்டு நெசவாளர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் இவர்களுக்கான மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சியும் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் முத்துசாமி கூறியதாவது: பட்டுக்கூடு ஏல விற்பனை மையம் கர்நாடகாவில் உள்ளதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை விவசாயிகள் கர்நாடகாவிற்கு சிரமப்பட்டு தான் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. எனவே பட்டுக்கூடு விற்பனை ஏல மையத்தை ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். சீனா போன்ற வெளிநாடுகளில் இருந்து பட்டுக்கூடு இறக்குமதிக்கு முன்பு விதிக்கப்பட்டிருந்த 40 சதவீதம் இறக்குமதி வரியை 10 சதவீதமாக குறைத்ததும் உள்ளூர் பட்டுக்கூடுகளின் விலை சரிவுக்கு முக்கிய காரணமாக உள்ளது.

எனவே உள்ளூர் பட்டு உற்பத்தியாளர்கள், பட்டு நெசவாளர்கள் நலன் காக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசின் தாராள இறக்குமதி கொள்கை காரணமாக ரூ.180க்கு விற்ற ஒரு கிலோ கொப்பரை தேங்காய் விலை ரூ.65 ஆகவும், ரூ.100க்கு விற்ற ஒரு கிலோ எள் ரூ.50 ஆகவும் விலை குறைந்துள்ளது. எனவே கொப்பரை, எள் போன்றவற்றிற்கு குறைந்தபட்ச ஆதார விலையையும் அரசு நிர்ணயம் செய்ய வேண்டும். இவ்வாறு முத்துசாமி தெரிவித்தார்.

**விளைச்சல் இல்லாததால் தக்காளி விலை உயர்வு**

கரூர், . விளைச்சல் இல்லாததால் தக்காளி விலை உயர்ந்து வருகிறது. கரூர் உழவர் சந்தை மார்க்கெட்டிற்கு உள்ளூரில் விளையும் தக்காளி விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதுதவிர தர்மபுரி மாவட்டம் ராயக்கோட்டையில் உள்ள தக்காளி மார்க்கெட்டில் இருந்து பல்வேறு மாவட்டங்களுக்கும் தக்காளி விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. உள்ளூரில் தக்காளி விளைச்சல் இல்லை. முன்பு நாட்டுத்தக்காளி, ஒட்டு விதை தக்காளி என விற்பனை செய்வார்கள். தற்போது ஒட்டுவிதை தக்காளி மட்டுமே விற்பனைக்காக வருகிறது.

உள்ளூர் விளைச்சல் குறைந்துவிட்டது. இதனால் கடந்த ஆண்டு கிலோ ரூ.10க்கு உழவர்சந்தையில் விற்பனை ஆன தக்காளி படிப்படியாக விலை

உயர்ந்து வருகிறது. தற்போது கிலோ ரூ.26க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடைகளில் ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனை செய்கின்றனர். பருவமழை இன்னும் துவங்கவில்லை. காவிரிநீரை நம்பியே இருக்க வேண்டியதிருக்கிறது. கிணற்றுப்பாசனத்தில் சிறிய அளவுக்கே தக்காளி சாகுபடி நடைபெற்று வருகிறது. மேலும் வெயில் அதிகமாக இருப்பதால் தக்காளி விலை குறைய வாய்ப்பில்லை என வியாபாரிகள் தெரிவித்தனர்.

## உழவர் பாதுகாப்பு திட்ட நிதியுதவி

கரூர், : கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்து பொதுமக்களிடம் இருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதில், மண்மங்கலம் வட்டம் புஞ்சைதோட்டக்குறிச்சி கிராம உதவியாளராக பணிபுரிந்த சாந்தப்பன் என்பவர் பணியில் இருக்கும் போது, இறந்து விட்டதால் அவரின் மகனுக்கும், கிருஷ்ணராயபுரம் தாலுகா, பஞ்சப்பட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த பாலகிருஷ்ணன் என்பவர் பணியில் இருக்கும் போது, இறந்து விட்டதால் அவரின் சகோதரிக்கும் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையையும், வருவாய்த்துறையின் சார்பாக, முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் மண்மங்கலம் தாலுகாவை சேர்ந்த 11 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 30ஆயிரத்து 500 மதிப்பிலான நிதியுதவிகளையும் வழங்கினார்.தொடர்ந்து, குளித்தலை தாலுகாவை சேர்ந்த 11 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 16ஆயிரத்திற்கான நிதியுதவியும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பாக 7 பயனாளிகளுக்கு தலா ரூ.3,450 வீதம் ரூ.24ஆயிரத்து 150 மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்கள் என மொத்தம் 31 பயனாளிகளுக்கு ரூ.2 லட்சத்து 70ஆயிரத்து 650 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில், டிஆர்ஓ அருணா, கலெக்டரின் நேர்முக உதவியாளர் அனிதா, மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் பாலாஜி, சமூக பாதுகாப்பு திட்ட தாசில்தார்கள் சக்திவேல், பாலசுந்தரம் உட்பட அனைத்து அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## 17ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கரூர், : கரூர் மாவட்டத்தில் ஜூலை மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 17ம்தேதி நடைபெறுகிறது. கரூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் கலெக்டர் தலைமையில் அன்றைய தினம் காலை 11 மணிக்கு இந்த கூட்டம் நடைபெறுகிறது. மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்துகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டுமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரும்பு பயிரில் போரான் சத்து பற்றாக்குறை போக்க அதிகாரி விளக்கம்

சேதுபாவாசத்திரம், : கரும்பு பயிரில் காணப்படும் இரும்பு மற்றும் போரான் சத்துக்கள் பற்றாக்குறையை போக்கிடும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில், இரும்பு சத்து பற்றாக்குறையினால் இளம் இலைகள் வெளுத்து காணப்படும். பயிரின் குறுத்து இலைகளும் காகிதம் போன்று வெளுத்தும் காணப்படும். இக்குறையினை போக்கிட 5 கிராம் பெர்ரஸ் சல்பேட் (அன்னபேதி உப்பு) மற்றும் 10 கிராம் யூரியாவை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து இலை வழியாக தெளிக்க வேண்டும். அல்லது ஏக்கருக்கு 10 கிலோ பெர்ரஸ் சல்பேட்டையும், 5 டன் தொழுஉரத்தையும் அடியுரமாக இட வேண்டும். துத்தநாகச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டால் இலைகளின் நடுவில் பெரிய காய்ந்த கோடுகளும் மற்றும் இலை நடு நரம்பில் காய்ந்த புள்ளிகளும் தோன்றும். இதனை நிவர்த்தி செய்திட 1 ஏக்கருக்கு துத்தநாக சல்பேட் 10 கிலோ அடியுரமாக இட வேண்டும் அல்லது 5 கிராம் துத்தநாக சல்பேட்டை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து 10 நாட்கள் இடைவெளியில் இலை வழியாக தெளிக்க வேண்டும். போரான் சத்து பற்றாக்குறையினால் இலைகளின் நுனியிலிருந்து 2-3 செ.மீ அகலத்திற்கு அழுகிய பழுப்பு நிற புள்ளிகள் காணப்படும். இலைகள் மிகவும் சிறுத்து, இளம் இலைகள் மஞ்சள் நிறமாக மாறிவிடும். வளரும் கரும்பின் நுனிப்பகுதி காய்ந்தும், அதன் பக்காவாட்டில் இலை குருத்துக்கள் அனைத்தும் ஒரே கொத்தாக

காணப்படும். இக்குறையினை போக்கிட ஒரு ஏக்கருக்கு போராக்ஸ் 400 கிராம் அடியுரமாக இடவேண்டும். அல்லது போராக்ஸ் 3 கிராம்மை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து இலை வழியாக 10 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு அவர் அந்த செய்தி குறிப்பில் கூறியுள்ளார்.

## பேரிடர் மேலாண்மை பயிற்சி

நாகை,: நாகை கலெக்டர் அலுவலகத்தில் அரசு அதிகாரிகளுக்கு பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் இயற்கை இடர்பாடுகள் காலங்களில் எடுக்க வேண்டிய முன்எச்சரிக்கை நடவடிக்கை குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமில் பேரிடர் என்பது நம்மால் எதிர்பார்க்க முடியாத அளவில் இயற்கையாக வெளிப்படுகிற மிகப்பெரிய விபத்தாகும். இத்தகைய சூழல் உலகம் எங்கும் ஏற்பட்டு கொண்டிருக்கிறது. கடந்த 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவு நமக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. கடற்கரை பகுதிகளில் பல்நோக்கு வசதிகளுடன் கூடிய அவசர கால தங்குமிடங்கள் மாவட்டத்தில் 8 இடங்களிலும், இயற்கை பேரிடர் தொடர்பான முன் எச்சரிக்கை கருவிகள் 54 இடங்களிலும், பேரிடர் காலத்தில் தொலைதொடர்பு முற்றிலும் பாதிக்கப்படுகிறது. இதை சமாளிக்க கம்பி இல்லா மிக உயர் அதிர்வெண் கருவிகளை இயக்கும் 9 மையங்கள் அமைந்துள்ளது. இவை எல்லாம் பேரிடர் காலங்களில் விரைந்து செயல்பட்டும் முன்எச்சரிக்கையாகவும் உயிரிழப்புகள் சேதத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளாகும். இத்திட்டம் இயற்கை மற்றும் செயற்கை பேரிடர்களிலிருந்து நம்மையும், சமுதாயத்தையும் எவ்வாறு பாதுகாப்பது என்பதற்காக இந்த பயிற்சி அளிக்கப்படுகிறது என்று விளக்கமளிக்கப்பட்டது. பேரிடர் காலங்களில் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து பராமரிக்கவும், அதன் முதற்கட்டமாக மாவட்டத்தில் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டமானது தொடர்ந்து மக்களுக்கு பேரிடர் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பேரிடர் காலங்களில் தங்களை தற்காத்து கொள்ளவும் பயிற்சியும் வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

**பழநி பகுதியில் பயிறு வகைகளில் அதிக விளைச்சல் வேளாண் அதிகாரிகள் ஆலோசனை**

பழநி, : பயிறு வகைகளில் அதிக விளைச்சல் பெற்றிட டி.ஏ.பி. கரைசல் பயன்படுத்த வேண்டுமென வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி உள்ளனர்.பழநி பகுதியில் 10 ஆயிரம் எக்டேருக்கு மேல் பயிறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள பயிறு வகைகளில் நல்ல தரமான மணிகளை பெற வேளாண் அதிகாரிகள் கூறியதாவது,

தரமான பயிர்களை பெற்றிடவும், கூடுதல் மகசூல் பெற்றிடவும் டி.ஏ.பி. கரைசலை இருமுறை தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 2 கிலோ டி.ஏ.பி. உரத்தினை முதல் நாள் 10 லிட்டர் நல்ல தண்ணீரில் ஊற வைக்க வேண்டும்.

மறுநாள் மாலை ஊற வைத்த கரைசலில் இருந்து தெளித்த நீரை வடித்து எடுத்து அதனை 190 லிட்டர் நல்ல தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலமாக பூக்கும் தருவாயில் ஒரு முறையும் மறுமுறை மேற்கூறிய முறையில் மீண்டும் 10 முதல் 15 நாள் இடைவெளியில் கைத் தெளிப்பான் மூலமாக 200 லிட்டரில் கலந்து தெளிக்க வேண்டும். அதன் மூலமாக அதிகப்படியான பூக்களும், திறட்சியான மணிகளும் நல்ல விளைச்சலும் பெறலாம். தற்சமயம் டி.ஏ.பி. கரைசல் விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றது. தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரிடம் உரிய மானிய விண்ணப்பம் பெற்று வாங்கிக் கொள்ளலாம் என்று வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.